ment have taken any action on the suggestions sent by the Vigilance Commission so far and if not, when action would be taken on that?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி அனுப்பும் அந்தத் தகவல்கள் மீது அவ்வப்பொழுது தேவைப்பட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட துறையின்மீது புகார் செய்யப்படும்பொழுது, அந்தப் புகாரைக் குறிப்பிட்ட துறைக்கு அனுப்பி பைசல் செய்வதைவிட, ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவோ அல்லது வேறு இலாக்காவோ பார்ப்பது பொருத்தமாக இராதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூறப்படுகின்ற புகார்களின் தன்மையைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU T. MARTIN : Mr Speaker, Sir may I request the Hon. Chief Minister to state whether suggestions for reorganising the Vigilance Organisation have been sent by the Vigilance Commission to the Government and whether the Government have taken action on those suggestions and if not, when action would be taken on those suggesttions for streamlining the organisation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் அதுபற்றி அளித்துள்ள அபிப்பிராயங்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அவர்களும் அபிப்பிராயங்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால் அந்த அபிப்பிராயங்களின் மீது அரசு நடவடிக்கை எடுப்பதா அல்லது வேறு முறையிலே செய்வதா என்பதைப் பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவால் பெறப்படும் முறையீடுகள் மீது அந்த முறையீடுகளைப் பெற்றவுடன் எந்த அதிகாரி தவறு செய்தாரோ அந்த அதிகாரியைப் பற்றிச் சம்பந்தப்பட்ட இலாக்காவிற்கு எழுதுகிறார்கள். இவர் இன்ன குற்றம் செய்திருக்கிறார், எனவே, இந்த இடத்திலிருந்தால் நடவடிக்கை எடுக்க முடியாது, உடனே வேறு நடவடிக்கை எடுங்கள் என்று இலாக்காவிற்கு அனுப்புகிறார்கள். உடனே இலாக்காவினர் அந்த இடத்தைவிட்டு 200, 250 மைல்களுக்கப்பால் மாற்றிவிடுகிறார்கள். அப்படி மாற்றாமல் உடனே சஸ்பெண்ட் செய்து, வழக்குத் தீரும்வரை சஸ்பெண்ட் செய்ய அரசாங்கம் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதில் வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்யவைத்து விசாரணை செய்வதுஒரு முறை. சஸ்பெண்ட் செய்யாமலேயே அந்த வழக்கை விசாரணை செய்வது ஒருமுறை. இவை அவர்களின் மீது வந்துள்ள வழக்குகளின் தன்மையைப் பொறுத்து அரசு எடுத்துக் கொள்ளும் முறைகளாயிருக்கின்றன.

கூட்டுறவுத் துறை.

***610 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் இதுகாறும் விவசாய இலாகாவுடன் இணைந்திருந்த கூட்டுறவு இலாகா தனியாகப் பிரிக்கப்பட்டுப் புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1970 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அதிகரித்து வருவதால், கூட்டுறவுப் பணி குறித்து முழு அளவில் கவனிப்பதற்காக வென்றே செயலகத்தில் கூட்டுறவுத் துறை தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இத்துறையில் அரசுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையைத் தனியாகப் பிரித்ததால் நல்ல முறையிலே இயங்குவதாக அரசாங்கம் கருதுகிறதா? அதுபோல் வேறு ஏதாவது இலாக்காக்களைப் பிரிக்க அரசாங்கம் கருதியிருக்கிறதா? கடந்த ஓராண்டு காலத்தில் கூட்டுறவுத் துறைக்கு இரண்டு செயலாளர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்களா? அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இத்துறை இரண்டாகப் பிரிக்கப் பட்டது, நிர்வாக வசதிக்காகவும், காரியங்களை விரைவுபடுத்த வேண்டிய தற்காகவும் இருக்கிறது. 1965-ம் ஆண்டிலேகூட உணவு, வேளாண்மைத் துறை இரண்டாகத் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. 1967-க்குப் பிறகு தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறை இன்னும் அதிகப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் நிலவள வங்கி போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால் இப்படி இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தனியாக ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்ற அளவில் அரசு அந்த முயற்சியை மேற்கொண்டது. அதிலே செயலாளர்கள் அடிக்கடி மாற்றப்படுவதாகச் சொல்லுகிறார்கள். நிர்வாக வசதியைப் பொறுத்து அப்படிப்பட்ட காரியங்களை மேற்கொள்வதில் தவறு ஏதுமில்லை.

Classification of Backward Communities.

* 628 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the **Hon. the** Minister for Backward Classes be pleased to sttte :

(*a*) whether the Government is considering the revision of the system of classification of Backward Communities; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) பின்னிலை வகுப்பினர் நலனை ஆராய அரசு அண்மையில் அமைத்துள்ள குழுவின அறிக்கை கிடைத்தபின் அவசியமானால் இப்பிரச்னை ஆராயப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பின்னிலை வகுப்பினர் பிரச்னையைப் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு தன்னுடைய அறிக்கையை எந்த கால கட்டத்தில் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது காலவரை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஜூன் திங்கள் முடிவதற்குள் இந்த அறிக்கை கிடைக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் பகுதிகளில் வீரகுடி வேளாளர், வேடுவ நாயக்கர் என்று இரண்டு பகுதியினர் ஜாபிதாவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றனர். அப்படியிருந்தபோதினும் ஒரு ஜில்லாவில் தான் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, வீரகுடி வேளாளர் மதுரை மாவட்டத்தில் இல்லை என்று கூறியும், வேடுவர் நாயக்கர் என்று கையெழுத்துப் போடுவ